www.padippakam.com

# களத்தில்

களம்: 1 மே 1985 அன்பளிப்பு ரூபா 2-00

# மன்னார் பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டது

**9-5-85 அன்று மன்னார் பொலிஸ் நிலையம் தமிழீழ விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டது. பெருமளவு பொலிசாரும், கொமாண்டோக்களும் கொல்லப்பட்டனர். சரணடைந்த பொலிசார் ஆயுதங்கள் பறிக்கப்பட்டபின் விடுவிக்கப் பட்டனர். இரு பொலிசார் கைதுசெய்யப்பட்டு 16-5-85 அன்று விடுதலை செய்யப்பட்டனர். பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.**

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் பிரிவினால் மிகவும் நுணுக்கமாகத் திட்டமிடப்பட்டு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலினால் பொலிஸ் நிலையம் முற்றாக தகர்க்கப்பட்டது. ஐம்பதுக்கு மேற்பட்ட விடுதலைப் புலிகள் பங்கெடுத்த இத்தாக்குதல் சிறிலங்கா அரசை கதிகலங்க வைத்துள்ளது

விடுதலைப் புலிகளினால் முதலில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது கிலிகொண்ட பொலிசார் ஜெனரேட்டரை இயக்கி மீண்டும் வெளிச்சத்தை ஏற்ற முயன்றபோது விடுதலைப் புலிகளின் குறிதவறாத தாக்குதல் பொலிஸ் நிலையத்தை முற்றாக இருளில் மூழ்கடித்தது. ரொக்கற் லோஞ்சர் தன்னியக்கத் துப்பாக்கி போன்ற அதி நவீன ஆயுதங்களினால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலிற்கு தாக்குப் பிடிக்க முடியாத பொலிசாரும் விசேடபயிற்சி பெற்ற கொமாண்டோக்களும் புலிகளிடம் சரணடைந்தனர். பலர் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் ஆரம்பிக்கப் பட்டு அரைமணி நேரத்தில் பொலிஸ் நிலையம் முழுவதும் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டு வரப்பட்டது. பொலிஸ் நிலையதலைமைக் கட்டிடம் கொமாண்டோக்களிற் கென்புதிதாக நவீனமுறையில் கட்டப்பட்ட பாதுகாப்பான கட்டிடம் கொமாண்டோக்களின் விடுதி உபபொலிஸ் அதிபரின் விடுதி என்பன தகர்க்கப்பட்டன. பொலிசார் உபயோகித்த வாகனங்கள் யாவும் சேதப்படுத்தப்பட்டன.

பொலிஸ் நிலையம் தாக்கப்பட்ட அதே நேரத்தில் மிக அண்மையிலிருக்கும் இராணுவ முகாமிலிருந்து இராணுவம் வருவதை தடுப்பதற்காக, பொலிஸ் நிலையத்தையும் இராணுவ முகாமையும் இணைக்கும் ஒரேயொரு பாதையிலுள்ள பாலம் விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டது.(ஆயினும் இராணுவம் கவசவாகனங்களில் பொலிசாருக்கு உதவச் சென்றதாக லலித் அத்துலத் முதலி கதை அளக்கிறார்) இராணுவமுகாமிலிருந்து பொலிஸ் நிலையம் செல்வதற்கு வேறுபாதை எதுவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**இத் தாக்குதலின்போது வீர மரணமடைந்த இராஜன் (சபேசன்)இற்கு எமது வீர வணக்கங்கள்**

சிறீலங்கா இனவெறி அரசின் அட்டூழியங்களும, அடக்குமுறைகளும் கடந்த காலங்களில் மன்னார் பகுதியிலே மிக மோசமாக இருந்தது யாவரும் அறிந்ததே. மன்னார் பகுதியிலுள்ள வட்டக்கண்டல் என்ற இடத்தில் இருநூறுக்குமேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரால் (?) சுட்டுக் கொல்லப்பட்டது நினைவிருக்கும் மன்னார் பகுதி மக்களில் பெரும்பாலானோரை அகதிகளாக இந்தியாவிற்கு விரட்டிய சிறீலங்கா அரசு அங்கு சிங்கள வரை குடியேற்றத் திட்டமிட்டிருந்தது

மீன்வளம் மிக்க மன்னார் பகுதியை சிங்கள குடியேற்றத்தின் மூலம் அபகரிக்கத் திட்டமிட்டிருந்த அரசு பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டதால் கதி கலங்கிப் போயுள்ளது.

10-4-85 அன்று ஐந் நூற்றுக்கு மேற்பட்ட பொலிசாரையும்கொமாண்டோக்களையும் கொண்ட வடபகுதியிலேயே மிகப் பெரியதும் பாதுகாப்பானதுமான யாழ். பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டதும் நினைவிருக்கலாம். வட பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கட்டடம் தகர்க்கப்பட்டதுடன் பெருமள்வு ஆயுதங்களும் வெடிகுண்டுகளும் கைப்பற்றப்பட்டது

(8'ம் பக்கம் பார்க்க)




இந்து முஸ்லீம் கலவரத்தின் பின்னணியில்

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் ஓர் திருப்பு முனை

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றின் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணியும் கீழ்க்கண்ட அரசியல் ரீதியான அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுபட்டுச் செயற்படத் தீர்மானித்துள்ளன.

1. ஸ்ரீலங்கா ஆதிக்கத்திலிருந்தும், அடக்குமுறைகளிலிருந்தும் எமது தாயகத்தின் சுதந்திரத்தையும் இறைமையையும் வென்றெடுத்தல்.
2. இலங்கைவாழ் தமிழ்த் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுகின்ற தனியரசைத் தவிர்ந்த வேறெந்த குறைந்தபட்ச சமரச திட்டத்தையும் அங்கீகரிப்பதில்லை.
3. பரந்துபட்ட மக்களின் பங்களிப்போடு பரிணாமம்பெறும் வெகுஜன ஆயுதப்போராட்டத்தை (மக்கள் போராட்டத்தை) எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்
4. தேசிய சுதந்திரப் போராட்டத்தோடு சோசலிச புரட்சியையும் முன்னெடுத்து, சுதந்திரத் தாய்நாட்டில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.
5. உலக ஏகாதிபத்திய நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை பூரணமாக விடுவித்து, அணிசேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.

எமது இந்த ஒருமைப்பாடு விரிவுபட்டு வலுப்பெற ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு எமது மக்களின் விடுதலையில் அபிமானங்கொண்ட சகல தமிழ் மக்களையும் வேண்டிக்கொள்கின்றோம்.

## குச்சவெளியில் பொலிஸ் நிலையத் தகர்ப்பும் கடற்படை முகாம் தாக்குதலும்.

1-6-85 அன்று தமிழீழ விடுதலைப் புலிகளினால் குச்சவெளிப் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு ½மணி நேரத்தில் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது. பல கொமாண்டோக்கள் கொல்லப்பட்டனர். பொலிஸ் நிலையத்திலிருந்த பெருந்தொகையான ஆயுதங்களும் மற்றும் சகல பொருட்களும் கைப்பற்றப்பட்டபின் பொலிஸ் நிலையக் கட்டிடங்கள் முற்றாகத் தகர்க்கப்பட்டன.

பொலிஸ்நிலையத்தினருகிலிருந்த் கடற்படை முகாம்மீது மூன்றுமணி நேரமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர தாக்குதலில் பெருந்தொகையான கடற்படையினர் கொல்லப்பட்டு முகாம் பலத்த சேதத்துக்குள்ளாகியது. இத்தாக்குதல்களில் விடுதலைப் புலிகள் பக்கம் எவ்வித இழப்புகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழத்தின் தென்பகுதியில் நிகழ்ந்த கவலை தரும் சம்பவங்கள்

காலம் காலமாக சகோதரர்களாக வாழ்ந்துவரும் தமிழீழத்தின் தென் பகுதியின் (மட்டக்களப்பு) இந்து முஸ்லீம் மக்களுக்கிடையில் கடந்தமாதம் தோன்றிய வன்முறைகள் தேச விடுதலைக்காகப் போராடிவரும் அனைத்து முற்போக்குச் சக்திகளுக்கும் பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்தும் வகையில் ஜெயவர்த்தனாவின் பாசிச அரசு மேற்கொண்ட திட்டமிட்ட சதியே வன்முறைகளின் பின்னணியாயுள்ளது.

தமிழீழத்தின் தென் பகுதி முஸ்லீம்கள் தமிழீழப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை என்றும் அதனால் முஸ்லீம்கள் மீது இந்துக்கள் தாக்குதல்களை நடத்துவதாகவும் ஜெயவர்த்தனாவின் பாசிச அரசின் தகவல் சாதனங்கள் தீவிர பிரசாரத்தை மேற்கொண்டன. ஆனால் உண்மையில் நடந்ததென்ன?

''பொலீஸ் கமாண்டோக்கள் இந்து மக்களிற்கெதிரான தாக்குதலை மேற்கொண்டனர்'' என அமைச்சர் தேவநாயகம் அறிக்கை விடுத்தார். ''பிற இடங்களிலிருந்து குண்டர்கள் வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டு தாக்குதல் தொடங்கப்பட்டது'' என தொண்டமான் விபரித்தார். முஸ்லீம்களின் பெருமதிப்பிற்குரிய தலைவரான பதியுதீன் முஹம்மது ''முஸ்லீம்களின் பிறவிப் பகைவர்களான, அன்னிய சக்திகளின் சதியாக தமிழீழத்தின் தென் பகுதிச் சம்பவங்களை விபரித்தார். சர்வதேச பயங்கரவாதிகளான மொஸாட்டே கலவரத்தை திட்டமிட்டவர்கள் என பல முஸ்லீம் ஸ்தாபனங்கள் அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

துரதிர்ஷ்டமான சம்பவங்கள்பற்றிய மேற்குறித்த விளக்கங்கள் ஒன்றைத் தெளிவாக எமக்குப் புரிய வைக்கிறது. தமிழீழ தேச விடுதலைக்கான போராட்டம் அதன் சகலமுனைகளிலும் வேகமாக வளர்ச்சி பெற்றுவரும் நிஜத்தினை காண அஞ்சும் சிறிலங்காவின் அரசு, விடுதலைப் போராட்டத்தைப் பின்னடையச் செய்யும் எல்லாவிதமான நீசத்தனங்களையும் கையாளலாம் என்பதேயாகும், எனவே தமிழ் பேசும் மக்களும், இயக்கங்களும் இதனையிட்டு மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். தமிழ் பேசும் மக்களிடையே காணப்படும் சாதி, இன, மத வேறுபாடுகளை எதிரி பயன்படுத்தி குழப்பங்களையும் அழிவு முயற்சிகளையும் ஏற்படுத்தாவண்ணம் இருத்தல் இன்று சகலருக்குமுரிய கடமைகளிலொன்றாகும்.

இந்து முஸ்லீம் மக்களுக்கிடையில் இனப்பகையை கிளறிவிடுவதன் மூலம் தமிழீழத்தின் தென் பகுதி மக்களை அதிலும் குறிப்பாக முஸ்லீம் மக்களை தமிழீழத்திற்கான பொதுவான போராட்டத்திலிருந்து தனிமைப்படுத்தி தேசவிடுதலைப் போராட்டத்தை பலவீனப்படுத்தி விடலாம் என எதிரி நினைக்கின்றான். தமிழ் முஸ்லீம் தேசியஇனங்களின் நியாயமான போராட்டத்திற்காதரவாக இன்று உள்ள உலக அபிப்பிராயத்தை திசை திருப்பவும் அதிலும் குறிப்பாக மொஸாட்டுகளை அழைத்ததன்மூலம் அரபுநாடுகளின் அனுதாபம் எமக்கிருப்பதை இல்லாது செய்வதற்குமான முயற்சிகளை மேற்கொள்ளும் எதிரியின் தந்திரோபாயங்களை முறியடிக்கும் வகையில் இந்து முஸ்லீம் மக்களிற்கிடையே ஐக்கியத்தைப் பேணி ஈழவிடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லுவோமாக.

# பிலிப்பைன்சில் மக்கள் சக்தியை கட்டியெழுப்புதல்

ஜனாதிபதி மார்க்கோசுக்கும், நாட்டைச் சூறையாடும் அமெரிக்க செல்வந்த பல்தேசிய வியாபாரத் தாபனங்களுக்கும் எதிராக பிலிப்பைன்சில் நடைபெறும் போராட்டம் விழிப்படைந்த ஒரு சில போராளிகளால் மட்டும் நடாத்தப்படுவதல்ல. பொதுமக்கள் இப் போராட்டத்தில் பார்வையாளராக மாத்திரம் இருக்காமல் பங்காளிகளாக மாறியுள்ளனர். சமூகத்தின் கீழ் மட்டங்களில் பல்வகையான சிறிய தாபனங்களை அமைத்து, ஒன்றுபட்டு. தம் அரசியல் பொருளாதார பிரச்சினைகளை ஆழமாக விளங்கிக் கொள்வதிலும், பல்வகைப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை நடத்துவதிலும் பிலிப்பைன்ஸ் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இம் மக்கள் எழுச்சியின் படிகளை பார்க்கமுன்பு மக்களை எழவைத்த நாட்டு அரசியல் நிலைமையை நாம் மேலோட்டமாக விளங்க வேண்டும். 1896ல் ஸ்பானியாவினதும், 1946ல் அமெரிக்காவினதும் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்று அரசியல் ரீதியான விடுதலையை நாடு பெற்றபோதும், இன்றும் செல்வந்த வெளிநாடுகளுக்கு பிலிப்பைன்ஸ் பொருளாதாரரீதியாக அடிமைப்பட்டிருக்கிறது. நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவதாகக் கூறி நவீன கைத்தொழில் யந்திரங்களை நாட்டில் அறிமுகஞ் செய்தல், கூடிய தொழில் வசதிகளை ஏற்படுத்தல், முதலை நாட்டில் குவித்தல் என்பவற்றின் பெயரில் அந்நிய பல்தேசிய தாபனங்கள் பிலிப்பைன்சில் கால்வைத்தன. ஆனால் அவை செலவிடும் ஒவ்வொரு டொலருக்கும் பதிலாக 3.58 டொலரை லாபமாகப்பெறுகின்றன. இதில் 1டொலரை மாத்திரமே பிலிப்பைன்சில் திரும்ப மூதலீடு செய்கின்றன. மிகுதியை தம்சொந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்கின்றன. இதைவிட பிலிப்பைன்சின் இயற்கை வளத்திலும் பொருளாதாரத்திலும் 70% அளவை நாட்டுப் பிரஜைகளில் 1% அளவினர் தம் கைகளில் வைத்திருக்கின்றனர்.

இவற்றால் மக்களில் 80%மானோர் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்கின்றனர். 1965ல் 5000மில்லியன் டொலராக இருந்த நாட்டின் வெளிநாட்டுக் கடன் இன்று 34.5 பில்லியன் (Billion) ஆக அதிகரித்துள்ளது. விலையுயர்வு, குறைந்த வேதனம். வேலையில்லாத் திண்டாட்டம், போசாக்கின்மை, தொற்று நோய்கள் என்பன கிராமப் புறங்களிலும் நகரங்களிலும் தாண்டவமாடவே ஆட்சியாளருக்கெதிராக எதிர்ப்பு வளரத்தொடங்கியது. இதனால் 1972முதல் மார்க்கோஸ் "பட்டாரீதியாக'' இராணுவஆட்சியை நடாத்துகின்றான். பல்தேசிய தாபனங்களில் 85% அமெரிக்காவினதாகையால் பிலிப்பைன்சில் பல இராணுவத் தளங்களை அமைத்திருக்கும் அமெரிக்காவும் மார்க்கோசின் இராணுவ ஆட்சிக்கு ஆதரவு வழங்குகின்றது. தேசிய பாதுகாப்பு என்ற போர்வையின் கீழ் வெளிநாட்டுச் சக்திகளின் சொந்த நலன்களும், ஒரு சில உள்நாட்டு செல்வந்தரின் நலன்களும் பாதுகாக்கப்படுகின்றன.

எனினும் எமது எதிர்பார்ப்பிற்கு முரணாக இத்தகைய ஒடுக்குமுறைகள் மக்களை அடிபணிய வைக்காமல். ஒரு புரட்சி மனப்பான்மையை மக்கள் மனதில் உருவாக்கியது. தமது அடிமைத்தனத்திற்கும் வறுமைக்கும் படிப்பறிவின்மையோ, சோம்பலோ, பல குழந்தைகளைப் பெற்றமையோ காரணங்களல்ல. ஆனால் இன்றைய பிலிப்பைன்ஸ் சமூகத்தின் அரசியல் பொருளாதார அமைப்புகளே காரணம் என்பதை அடையாளங்கண்டு கொண்டனர். இப்படியாக உணர்வு ரீதியாக அரசியல் மயப்படுத்தப்பட்டிருந்த சில சமூகத் தொண்டர்கள் கிராமங்களுக்குச் சென்று பாமர மக்களுக்கு எழுத்தறிவையும் அரசியற் தெளிவையும் கற்பித்தனர். இம் முயற்சியில் அரசாங்கத்திடமிருந்து பாரதூரமான தண்டனைகளை இவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது.

முன்பு''அரசியல்வாதி'' என்றழைக்கப்படுவது ஒரு சில செல்வ குடும்பங்களிலிருந்து பாரம்பரியமாக அரசியலில் ஈடுபட்டவர்களே ஆனால் இப்போ கிராமப்புற பாமர மக்களும் ''அரசியல் வாதிகள்'' ஆகினர். ''பாராளுமன்றம்'' வீதிகளிலும் வயல் நிலங்களிலும் செயற்படத்தொடங்கியது. முன்பு ஒரு பிரமுகரை மையமாகக்கொண்டு அரசியற்கட்சிகள் தாபிக்கப்பட்ட. இப்போ மக்களின் பொது உரிமைகளை மையமாகக் கொண்டு தாபனங்கள் அமைக்கப்பட்டன. இதனால் இப்போ தொழிலாளரின் KMU என்ற அமைப்பு, ஆசிரியர்களின் ACT என்ற அமைப்பு, மாணவர்களின் LFS என்ற அமைப்பு என்பன இயங்குகின்றன. இத்தகைய பல்வேறு புரட்சிகர அமைப்புகளையும் உள்ளடக்கிய தேசிய ஜனநாயக முன்னணி (NDF) 1973ல் தாபிக்கப்பட்டது. அரசாங்கத்தால் சட்டவிரோதமென தீர்க்கப்பட்ட சில தாபனங்களும் இதில் அங்கம் வகிக்கின்றன.

அஞ்ஞாதவாசம் செய்து நாடுதிரும்பும் போது விமானநிலையத்தில் வைத்து மார்க்கோசின் அடியாட்களினால் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட எதிர் கட்சித்தலைவர்களுள் ஒருவராகிய அக்கினோசின் படுகொலைக்குப் பின் இத்தகைய எதிர்ப்பியக்கங்களின் தீவிரமும் பருமனும்

7ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவத்தின் அழிவுவேலைகள் தொடர்கின்றன----

சிறீலங்கா இனவெறி அரசு தமிழ் மக்கள் மீதான அடக்குமுறைகளை தீவிரப்படுத்தியுள்ளது தமது பதவிகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தினர் இனவாதத்தை தூண்டி தமிழ் மக்களின் மேல் கொடுமைகள் புரிகின்றனர்.

### காரைநகரில்

4-5-85 அன்று காரை நகரில் கடற்படையினரின் அட்டகாசத்தினால் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டனர். பலர் கொலை செய்யப்பட்டனர். பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். வீடுகள கடைகள் தீவைத்துக் கொழுத்தப்பட்டன. கூட்டிறவுச் சங்கம் எரிக்கப்பட்டது. இத்தகைய அழிவு வேலைகளில் ஈடுபடுவதற்காக பலர் ஹெலிக்கொப்டர் மூலம் இறக்கப்பட்டனர்.

அரசபடையின் அழிவுகள் ஒரு புறமிருக்க வேறு சிலரும் துப்பாக்கி முனையில் மக்களை அகதிகளாக்கினர். அரச படையின் அட்டூழியங்களால் அகதிகளாக்கப்பட்டோர் காரை நகரிலேயே தஞ்சம் புகுந்திருக்க, பிரச்சினை இல்லாத இடங்களிலிருந்தோர் மினி பஸ்களிலும், வான்களிலும் வட்டுக்கோட்டை, சுழிபுரம் போன்ற பகுதிகளில்கொண்டுவந்து இறக்கப்பட்டனர் இத்தகைய செய்கைகள் கடற்படையினர் கொள்ளைகளில்ஈடுபடுவதற்கு மேலும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

இவ்வாறு கொடுமைகள் புரிவதன் மூலம் மக்களை அடிபணிய வைக்கலாம் என ஆட்சியாளர் தப்புக்கணக்குப் போடுகின்றனர். மக்களோ இவ்வளவு அழிவிற்குப் பின்னும் சோர்ந்து வாழலாமா எனக் கேட்கின்றனர்.

### வல்வெட்டித்துறையில்

8-5-85 அன்று இரவு 3 கப்பல்களில் ஏறக்குறைய 3000 சிங்கள கூலிப்பட்டாளத்தினர் வல்வெட்டித்துறை பருத்தித்துறைபோன்ற இடங்களில் கொண்டு வந்து இறக்கப்பட்டனர். அதிகாலை 3 மணியளவில் இவர்கள் வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, பருத்தித்துறை, திக்கம், பொலிகண்டி போன்ற பகுதிகளைச் சுற்றி வளைத்துப் படுத்துக் கொண்டனர். அதன் பின்னர் இவர்களின் "தேசிய ஒற்றுமை பேணும் (?)" நடவடிக்கைகளில் இறங்கினர். ஊறணி சனசமூக நிலையத்தினுள் 29 தமிழ் மக்களை அடைத்து வைத்துக் கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தனர். இச் சத்தத்தைக் கேட்டு வெலவெலத்துப் போன சற்று தொலைவிலிருந்த வேறொரு இராணுவக்குழு பதறியடித்து கர்த்த குழுவினருடன் தொடர்பு கொண்டது. கொல்லப்பட்டது தமிழ் மக்கள் என்று கேள்விப்பட்ட "நாட்டின் ஒற்றுமைக்காகப் பாடுபடும்" சிறீலங்கா இராணுவத்தினர் கெக்கலி கொட்டிச் சிரித்தனராம். ஊறணி மடத்தில் 12பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப் பட்டவர்களுள் அன்னலிங்கம் எனப்படும் 15 வயது நிரம்பிய ஊமைச் சிறுவனும் (!) ஒருவனாவன் இவ்வாறு தமது கடமையைச் செவ்வனே முடித்துக் கொண்ட இராணுவத்தினர் 9ம் திகதி மாலை 4 மணிக்கு கப்பலில் ஏறத் தொடங்கி 6 மணிக்குப் புறப்பட்டுச் சென்றனர். இவர்களது நடவடிக்கைகளால் ஒரு பெண் உட்பட 53 "பயங்கரவாதிகள்" (அரசின் மொழியில்) கொல்லப்பட்டனர். இவர்களுள் நாலுபேர் அடையாளம் காணப்படவில்லை. ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 9 ஆண்களும கொலலப்பட்டவர்களில் அடங்குவர். ஓரிடத்தில் கணவனைக் கொல்ல வந்தபோது கணவனை கட்டிப்பிடித்தவாறு மனைவி கதறியழுது கெஞ்சியிருக்கிறார். பலவந்தமாக மனைவியை அகற்றிவிட்டுக் கணவன் சுடப்பட்டிருக்கிறார். வேறொரு இடத்தில் தகப்பனைக் கட்டிப்பிடித்த இரு குழந்தைகளை வீசியெறிந்து விட்டு தகப்பன் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பின்னர் 10ம் திகதி காலையில் கடலிலிருந்து கடலோரக் கிராமங்களிற்கு "செல்" களினால் தாக்கினர் அதன் பின் பல வாகனங்களில் வந்திறங்கிய இராணுவத்தினர் சோதனை என்ற பெயரில் பல வீடுகளுக்குள் புகுந்து நகைகளைக் களவாடியும் பெண்களை மானபங்கப் படுத்தியுமுள்ளனர். 50 பெண்கள் கற்பழிக்கப்பட்டுள்ளனர். 100 ஆண்கள் வரை கைது செய்யப்பட்டு பின்னர்90 பேர் விடுவிக்கப்பட்டனர்.

அடுத்தடுத்து ஏற்படும் பல பாரிய இழப்புகளின் பின்னும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் நிலைகுலையாது தீர்க்கமான பங்கினை ஆற்றி வரும் வடமாராட்சிப் பகுதியை இவ்வாறான இராணுவ முற்றுகைகளாலும் உயிர், பொருள் சேதங்களாலும் கற்பழிப்புகளாலும் சோர்வடையச் செய்து விடலாம் என்று கனவு காண்கின்றது சிங்கள இனவாத அரசு. ஆனால் இழப்புகள் தம்மைப் பாதித்தாலும் அளப்பரிய அர்ப்பணிப்புகளாலும்தியாகத்தாலும் எமது மக்கள் மேலும் மேலும் விடுதலைப் போராட்டத்தில் நேரடியாகப் பங்களிப்பை ஆற்றுவதை இவர்களால் தடுக்க முடியவில்லை.



நெடுந்தீவில் அரச பயங்கரவாதிகளால் குத்திக் கொல்லப்பட்ட பச்சிளங் குழந்தை

### நெடுந்தீவில்

நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானை நோக்கி வந்து கொண்டிருந்த பிரயாணிகள் படகொன்றுபிளாஸ்டிக் படகில் சாதாரண உடையில் வந்த ஆயுதப்படையினரால் வழிமறிக்கப்பட்டது. படகின் உள்ளே புகுந்தவர்கள் எல்லோரையும் படகின் முன் அறைக்கு அழைத்துச் சென்றனர். பின்னர் நடுவிலிருந்த எஞ்சின் அறைக்குப் பின்னாலிருந்த அறைக்குள் பிரயாணிகளை ஒவ்வொருவராக அழைத்து பிடியற்ற கோடலிகளாலும் கத்திகளாலும் மக்களை வெட்டியும் கொத்தியும் சின்னாபின்னப்படுத்தினர். பின்னர் நயினாதீவிலுள்ள அகிம்சா மூர்த்தியின் ஆலயத்தைப் பாதுகாக்க படகில் ஏறிச்சென்றுவிட்டனர். 3மாத குழந்தையுட்ட பெண்கள், வயோதிபர்கள், நடுத்தரவயது ஆண்கள் உட்பட 39பேர் இறந்துள்ளனர். ஏனையோர் பலத்த காயங்களுடன் கரை தட்டிய படகிலிருந்து மீட்கப்பட்டனர்.



வல்வெட்டித்துறை மடத்தில் வைத்துச் சுடப்பட்ட தமிழ் இளைஞர்கள்

## இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கத்தின் இனவாதம்

அண்மையில் அநுராதபுரத்தில் சிங்கள பொது மக்கள் கொலை செய்யப்பட்டமையை இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கம் கண்டித்துள்ளது. இது நியாயமானதே. ஆனால் தமிழ் மக்கள் கொலை செய்யப்படும்போதும், கற்பழிக்கப்படும்போதும், தமிழரின் உடைமைகள் கொள்ளையடிக்கப்படும்போதும் ஆயர் சங்கம் மௌனமாக இருப்பதை தமிழ் மக்களால் விளங்கிக்கொள்ள முடியவில்லை.

யாழ் பல்கலைக்கழக கத்தோலிக்க மாணவர் சங்கம் இலங்கை கத்தோலிக்க ஆயர் சங்கத்தின் இனவாதப் போக்கை வன்மையாகக் கண்டித்துள்ளது. அடக்குமுறைக்காளாக்கப்பட்ட எல்லா மக்களிற்குமாகவே ஜேசுநாதர் போராடினார். அடக்கப்பட்ட மக்களிற்காக ஆளும் வர்க்கத்திற்கெதிராக குரலெழுப்பினார். ஆனால் கத்தோலிக்க மதத்தைப் பாதுகாப்பதாகச் சொல்லிக் கொள்பவர்கள் ஆளும்வர்க்கத்திற்காக அடக்கப்பட்ட மக்களிற்கெதிராகச் செயற்படுகிறார்களா என தமிழ் பேசும் கத்தோலிக்கர் கேட்கின்றனர். அல்லது இலங்கை கத்தோலிக்க சபையில் தமிழ் மக்களிற்கு இடமில்லையா என இவர்கள் கவலை கொண்டுள்ளனர். ஜேசுநாதரின் உண்மையான போதனைகளைப் பின் பற்றி அவரின் சீடர்கள் இனிமேலாவது அடக்கப்பட்ட மக்களிற்காக குரல் கொடுப்பார்களா?

படிப்பகம்

**''ஆயிரம் மேடைகள் போட்டு பேச்சுகள் நிகழ்த்துவதை விட ஒரு வெற்றிகரமான கொரில்லாத் தாக்குதல் மக்களை நம்பிக்கையூட்டி பெருமளவில் அணிதிரட்டும்''**

# தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள்

சிறிலங்கா நாடு பிரித்தானியரிடமிருந்து அரசியல் சுதந்திரமடைந்த பின்னர் மாறி மாறி வந்த பெளத்த சிங்கள பேரினவாத அரசுகள் திட்டமிட்டு தமிழ் மக்களுடைய உரிமைகளை பறித்து வந்துள்ளன. பெளத்த சிங்கள பேரினவாதிகள் முழு இலங்கையையுமே ஒரு பெளத்தசிங்கள நாடாக மாற்றுவதற்கு திட்டமிட்டனர், பாராளுமன்ற அரசியல் முறையில் பதவிகளைக் கைப்பற்றுவதற்காகவும் அதனைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவும் அரசியல் வாதிகள் இனவாதத்தை வளர்த்து வந்துள்ளனர் சரியான பொருளாதாரக் கொள்கை இன்மையால் நாட்டு மக்கள் வறுமையில் கஷ்டப்படும்போது அவர்களைத் திசை திருப்புவதற்காக இனப் பிரச்சினையை பூதாகாரமாகக் காட்டி, அதுவே மக்களின் கஷ்டங்களிற்குக் காரணம் என நிறுவ முற்பட்டுள்ளனர்.

தமிழ் பேசும் மக்கள் மீதான சிறிலங்கா அரசின் அடக்குமுறைகள் அதிகரிக்க அதிகரிக்க தமிழ்பேசும் மக்களுடைய போராட்ட வடிவமும்மாற்றமடைந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. ஆரம்ப காலங்களில் தமிழ் மக்களிற்கு தலைமைதாங்கிய தமிழரசுக் கட்சியினரும் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் சிங்கள அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியும், அஹிம்சை வழியில் எதிர்ப்புக்களைத் தெரிவித்தும் தமிழ்பேசும் மக்களிற்கு சில சலுகைகளைப் பெற்றுத்தர முயற்சித்தனர். இனப்பிரச்சினைக்கு அடித்தளமாக இருப்பது பொருளாதாரப் பிரச்சினைதான் என்பதை விளங்கிக் கொள்ளாத அல்லதுவிளங்கிக்கொள்ளவிரும்பாத காரணத்தினால் இவர்களது போராட்டம் தமிழ் பேசும் மக்களிற்கு எந்தவித மீட்சியையும் பெற்றுத்தராத அதே நேரம் தமிழ் பேசும் மக்கள் மீதான அடக்கு முறைகள் அதிகரித்து வந்துள்ளன.

இன அடக்கு முறை அதிகரிக்கப் பட்டதானது தமிழர் விடுதலைக் கூட்டணியினரை தவிர்க்க முடியாதவாறு தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைக்கத் தூண்டியது. தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் கோரிக்கைகள் அதிகரித்துச் சென்ற அதே நேரம் அதற்கான போராட்டம் அவர்களால் தீவிரப்படுத்தப்படவில்லை.

இந்நிலையில் அதிருப்தியடைந்த இளைஞர்கள் இனப்பிரச்சனைக்கான தீர்வு தனிநாடமைத்தல் தான் என்பதைப் புரிந்து கொண்டு அதனை ஆயுதப் போராட்டத்தின் மூலமே அடைய முடியும் என்பதையும் உணர்ந்து கொண்டனர். எமது உள்நாட்டு வெளிநாட்டு நிலைமைகளை நன்கு ஆராய்ந்து அதற்கேற்ற ஒரு போராட்ட வடிவத்தையும் தெரிவு செய்தனர்.

போராட்டம் படிப்படியாக வளர்ச்சியடைந்து வரும் அதேவேளையில் தமது பிரச்சனைகளை மேலும் மேலும் ஆழமாகப் புரிந்து கொண்டனர். இனரீதியான அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறும் அதேவேளையில் சகல விதமான ஏற்றத்தாழ்வுகளுமற்ற, ஒரு புதிய சமுதாய அமைப்பிலேயே நாம் பிரச்சனைகளற்று பூரண சுதந்திரத்துடன் வாழலாம் என்பதை உணரத் தலைப் பட்டனர்.

இனப்பிரச்சினை முனைப் படைந்துள்ள இன்றைய நிலையில் எம்மத்தியில் வேறும் பல சமூகக் குறைபாடுகள் உண்டு என்பதை விளங்கிக் கொண்டுள்ளனர். பெரும் தியாகங்கள் புரிந்து தமிழ் பேசும் மக்கள் நடத்தும் இப் போராட்டத்தின் மூலம் அனைத்துப் பிரச்சனைகளிற்கும் தீர்வு காணப்படல் வேண்டும்.

இன்று தமிழ்பேசும் மக்கள் மீதான இராணுவ அடக்குமுறைகள் உக்கிரமடைந்துள்ள போது, அவர்களின் உயிரிற்கும் உடமைக்கும் உத்திரவாதம் அளிக்கப்படாத போது இங்கிருந்து சிறீலங்காஇராணுவத்தைத் துரத்தியடிப்பதே எமது போராட்டத்தின் முதற்படியாகும். அந்தப் போராட்டத்தில் எழக்கூடிய உணவுப்பற்றாக்குறை, மருத்துவ வசதிகள் இன்மை போன்ற பக்கப் பிரச்சினைகளும் சரியாகக் கையாளப்படுதல் அவசியம்.

இங்கு ஒரு புரட்சிகர நிலைமையை உருவாக்குவதன் மூலம் பெரும்பான்மையான மக்களை விடுதலைப் போராட்டத்தில் ஈடுபடுத்துவதற்கும், எதிரியை நிலைகுலையச் செய்து அவனிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தெடுப்பதற்கும், எம்மை வளர்த்துக்கொள்வதற்குமான ஒரு சரியான போர் முறையாக கொரில்லா போராட்டமுறை கைக் கொள்ளப்பட்டது.

ஆரம்ப காலங்களில் இப் போராட்டமுறை பல வித விமர்சனங்களிற்கும் உள்ளாக்கப் பட்டிருந்திருப்பினும் இன்று சகலராலும் இப்போராட்ட முறையே எமது நிலைமைகளிற்குப் பொருத்தமானது என ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளது.

ஆரம்பத்தில் துரோகிகளை ஒழித்தல் என்பதிலிருந்து தொடங்கப்பட்ட எமதுகொரிலலாப்போராட்டம் பின்னர் துப்பறியும் பொலிசாரை ஒழித்தல்; ஒரு பொலிஸ் ஜீப்பைத் தகர்த்தல், இரண்டு இராணுவத்தை சுட்டுக் கொல்லல், இராணுவத்தொடர் மீது தாக்குதல். பொலிஸ் நிலையத்தைத் தகர்த்தல், இராணுல முகாம்மீது தாக்குதல் என்றவாறு படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

முதலில் மிகக்குறைந்த எண்ணிக்கையுள்ள இளைஞர்களே பங்கெடுத்துக் கொண்ட இப்போராட்டத்தில் படிப்படியாக மக்களின் பங்களிப்பு அதிகரித்து தற்போது பரந்துபட்ட அனைத்து மக்களும் பங்கெடுத்துக் கொள்ளும் மக்கள் போராட்டமாக மாறிக் கொண்டிருக்கிறது.

தொடக்க காலங்களில் எதிரியைத் தாக்கி நிலைகுலையச்செய்தல் என்ற வடிவில் தொடங்கிய போராட்டம் வளர்ச்சியடையும் போது இயல்பாகவே மக்களிற்கேற்படும் ஏனையசகலவிதபாதிப்புகளிற்கும தீர்வுகாணும் வகையில் எமது போராட்டம்பல்வேறு கிளைகளிலும் வளர்ச்சியடைகிறது.

எமது விடுதலைப் போராட்டம் மிகவேகமாக வளர்ச்சியடைந்துவரும் இவ்வேளையில் பெரும்பான்மையான மக்களும் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். இந்நிலைமை எதிரிகளும் ஒற்றர்களும் எம்மத்தியிலேயே உலாவி தகவல்களை அறிந்து கொள்வதையும் இலகுவாக்குகிறது.

அண்மைக் காலத்தில் இராணுவத்தினர் பலஇடங்களிற்கும் திடீர் திடீர் என்று சென்று போராளிகளை சுட்டுக் கொன்றமையும், சிலரைக் கைது செய்தமையும், அவர்களின் இருப்பிடங்கள் தகர்க்கப் பட்டமையும் அறிந்ததே.

இராணுவத்தினர் கனரக வாகனங்களில் மட்டுமன்றி இ. போ. ச. பஸ், மினிபஸ் போன்றவற்றிலும் உலாவினர். சிவில் உடையில். வேட்டியும் சேட்டும்போட்டு. திருநீறும் சந்தனமும் பூசிக்கொண்டு கூட இராணுவத்தினர் நடமாடியது யாவருக்கும் தெரிந்ததே. அண்மையில் ஒரு இடத்தில் இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டிருந்த போது தப்பியோடிச்சென்ற ஒரு போராளி மினிபஸ் ஒன்றினுள் ஏறியபோது அதனுள் வேட்டி. சால்வையுடன இருந்த இராணுவத்தினர் அவரைக் கைதுசெய்தமை யாவருக்கும் தெரிந்திருக்கும்.

இவ்வாருக இராணுவ நடமாட்டம் அதிகரிக்கப் பட்டமை விடுதலைப்போராட்டத்தின் வளர்ச்சிக்கு தடையாகவே இருந்தது. இதனல் இராணுவ நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவேண்டிய அவசியமேற்படுகிறது

அண்மைக்காலங்களில் இராணுவத் தொடர் வண்டிகள்மீது பரவலாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் இராணுவ நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது. அதுமட்டுமல்லாமல் இராணுவத்திற்கு உளரீதியான பாதிப்பையும் அரசிற்கு பெருமளவு நஷ்டத்தையும் ஏற்படுத்தியுள்ளது

பொலிஸ் நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களினல் போராளிகள் பெருந்தொகையான ஆயுதங்களைப் பெற்றுக் கொள்ள முடிந்ததுடன் மக்களிற்கு தைரியத்தை கொடுத்து எதிரியை நிலைகுலையுமாறு செய்துள்ளது.

கொரில்லாப் போராட்டம் எதிரியை சற்றுப்பலப் படுத்தியுள்ளது என்பது உண்மையே. இருப்பினும் இது தமிழ்பேசும் மக்களிடையே புரட்சிகர நிலைமையை தோற்றுவித்து எமது போராட்டத்தை மக்கள் போராட்டமாக மாற்றுவதில் பெரும் பங்காற்றியுள்ளது. ஆரம்பகாலங்களில் மறைந்திருந்து இளைஞர்கள் நடத்திய போராட்டங்கள் பற்றிய தகவல்களை இலகுவில் பொலிசார் கண்டுபிடிக்கக்கூடியதாக இருந்தது. ஆனல் கொரில்லாப் போராட்டத்தின் வளர்ச்சியினலேயே இன்று ஓரளவு வெளிப்படையாகக் கூட மக்கள் மத்தியில் போராளிகள் வேலை செய்வது இலகுவாக்கப்பட்டுள்ளது. இன்று இராணுவத்தினர் தனியொரு ஜீப்பிலேயோ ஒரு தொடராகவோ கூட நடமாட முடியாத நிலை இருப்பதனலேயே மக்கள் போராட்டத்திற்கான தயாரிப்புகளை மிகவும் இலகுவாக துரிதமாக மேற்கொள்ளக்கூடியதாகவும், போராளிகளை கைதுசெய்வது கடினமானதாக்கப்பட்டும் உள்ளது.

# அரச படைகள் மீது விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள்



9-4-1985 அன்று தகர்க்கப்பட்ட யாழ் பொலிஸ்நிலையம்

தமிழீழத்தில் நிலை கொண்டிருக்கும் சிறீலங்காவின் ஆக்கிரமிப்புப் படைகளின் மீதான தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் கடந்த இரு மாதங்களாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்கள் மீதான ஆக்கிரமிப்பாளர்களின் அட்டூழியங்களிற்குப் பதிலடியாகவும், எமது விடுதலைப் போராட்டத்தை மேலும் வளர்த்து விஸ்தரிப்பதற்காகவும் தமிழீழமெங்கும் பரவலாக அதிரடித்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அடுத்தடுத்து நிகழ்ந்த பரவலான தாக்குதல்களால் சிறீலங்கா இராணுவம் நிலைகுலையச் செய்யப்பட்டதோடு பெருந்தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டமை விடுதலைப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்களை பெரிதும் பலப்படுத்தியுள்ளது. விடுதலைப் போராளிகள் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதவாறு பலப்படுத்தப்பட்ட பிரதேசங்கள் எனவலித் அத்நுலத் முதலியால் அறிவிக்கப்பட்ட மூதூர், திருமலை போன்ற பகுதிகளிலும் விடுதலைப் புலிகளினல் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதல்கள் சிறீலங்கா அரசை கதிகலங்கச் செய்துள்ள அதேவேளையில் தமிழ்பேசும மக்களை மேலும் தமது விடுதலைப் போராட்டத்தின் வெற்றியில் நம்பிக்கையூட்டி உற்சாகமடையச் செய்துள்ளது.

## கடந்த இரண்டு மாதங்களில் தமிழீழத்தில் இருந்த இரு பெரிய பொலிஸ் நிலையங்கள் கைப்பற்றப்பட்டன.

9-4-85 அன்று யாழ் பொலிஸ் நிலையம் கைப்பற்றப்பட்டது.

### FROM JAFFNA POLICE STATION

**ARMS**

(1) 303 Mark- 4 Bolt action rifle U. K ... 35
(2) Smith- Wession pumping action repeater U. S. A ... 46
(3) 12 bore 'Remington' shot gun Germany ... 55
(4) .22 Snider rifle ... 02
(5) 9m. m Sterling sub machine gun U. K ... 02
(6) 7. 62 self loading rifle (nato) ... 01
(7) 5. 56 Singapore Assault rifle (model 80) ... 02
(8) 38m m Tear gas Launcher gun U. S. A ... 05
(9) Revolver Smith- Wession .38 special U. S. A ... 20
Revolver webly .38 normal U. K ... 14
(10) Hand grenade israel ... 56
Hand grenade Israel H.E 36 Pakistan ... 23
(11) Tear gas Rockets (CN, CS) ... 60
(12) Tear gas Triple blast Grenade ... 30
Tear gas Triple blast Grenade Single blast ... 30

**AMMUNITIONS (ROUNDS)**

(1) .303 ... 2881
(2) 5.56 ... 2544
(3) 9 m m ... 6400
(4) .38 Normal ... 450
(5) .38 Special ... 400
(6) 7.62 Large ... 150
(7) 12 Bore plastic cartridges ... 6550
(8) 16 Bore plastic cartridges ... 640

**OTHER THINGS**

(1) S. L. R. Bayonet ... 46
(2) S. M. G Magazine ... 14
(3) Cleaning Rods ... 20 Boxes
(4) Searching Lights ... 02
(5) Gas Mask ... 02

9-5-85 அன்று மன்னார் பொலிஸ் நிலையம் கைப்பற்றப்பட்டது;

### FROM MANNAR POLICE STATION

**ARMS**

(1) .303 Mark 4 Bolt action rifle U. K ... 26
(2) Smith- Wession pumping action repeater U. S. A ... 08
(3) 12 Bore "Remington" shot gun Germany ... 50
(4) 9 m m carebain Germany ... 04
(5) 9 m m Sterling sub machine gun U K ... 04
(6) 5. 56 Singapore assault rifle (Model 80) ... 04
(7) .38 webley revolver U. K ... 01
(8) 38 m m Tear gas Launcher gun U. S. A ... 02
(9) Hand Grenade Israel ... 20
(10) Anti-personal land mines ... 98
(11) Tear gas Triple blast grenade ... 10
(12) Tear gas Rockets ... 49

**AMMUNITIONS (ROUNDS)**

(1) 303 ... 1184
(2) 9 m m ... 750
(3) 5. 56 ... 641
(4) .22 ... 550
(5) 7. 62 ... 14
(6) 12 Bore plastic Cartridges ... 120

**OTHER THINGS**

(1) Helmet ... 5
(2) Binocular ... 1
(3) Camera ... 1
(4) Video Deck ... 2
(5) 2 in 1 Set ... 1

## தமிழீழத்தின் பல பகுதிகளிலும் அரச படைகளின் ரோந்து சென்ற வாகனத் தொடர்கள் தாக்கப்பட்டன.

(1) 21-4-85 மன்னார்கண்டலில் புதுக்குடியிருப்பு ஒட்டி சுட்டான் பாதையில் கண்ணி வெடியின் மூலம் இராணுவத்தினர் வந்த ஒரு மினிபஸ் தகர்க்கப்பட்டது.

(2) 26-4-85 வியாபாரி மூலையில் (பருத்தித்துறை) கண்ணி வெடி மூலம் ஒரு கவச வாகனம் தகர்க்கப்பட்டது.

(3) 26-4-85 மூதூர் கட்டைபறிச்சானில் கண்ணி வெடிமூலம் ஒரு ஜீப் வண்டி தகர்க்கப்பட்டது.

(4) 28-4-85 கரவெட்டியில் கண்ணிவெடி மூலம் கவச வாகனம் தகர்க்கப்பட்டது.

(5) 29-4-85 அரியாலையில் இரு கவச வாகனங்கள் தகர்க்கப்பட்டன. அவற்றுள் ஒன்று கண்ணி வெடி மூலமும் மற்றயது ரொக்கெற் தாக்குதல் மூலமும் தகர்க்கப்பட்டது.

(6) 10-5-85 உடுப்பிட்டியில் பஸ் நிலையம் ஒன்றினுள் இருந்த இராணுவத்தினர் மீது கைக்குண்டு வீசி மென்டிஸ் என்ற ஒரு மேஜர் உட்பட ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

(7) 12-5-85 கொடிகாமத்தில் கல்லுக் கும்பியினுள் புதைத்து வைத்த கண்ணி வெடித்தாக்குதலில் நடந்து வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

(8) 13-5-85 குச்சவெளி திருமலை வீதியில் ஒரு ஜீப் வண்டி மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு மூன்று கொமாண்டோ பொலிசார் கொல்லப்பட்டனர்,

(9) 13-5-85 சாம்பல் தீவு ஆறும் கட்டையில் கொமாண்டோ பொலிசார் வந்த வான் ஒன்று கண்ணி வெடி மூலம் தகர்க்கப்பட்டது.

(10) 22-5-85 திருகோணமலையில் எறிகுண்டு தாக்குதலினுல் பிரான்ஸ் டிமெல என்ற விமானப்படை உயர் அதிகாரி உட்பட ஐந்து விமானப்படையினர் கொல்லப்பட்டனர்.



# மக்களோடு புலிகள்

தமிழீழ விடுதலையென்பது வெறுமனே ஆயுதப் போராட்டத்தினுல் மட்டும் அடைந்துவிடும் ஒன்றல்ல. அரசியல், சமூக, பொருளியல் ஆகிய அனைத்து முனைகளிலும் எமது விடுதலைப் புரட்சி நிகழ வேண்டும் என்பதை உணர்ந்துள்ள விடுதலைப் புலிகள் எமது பொருளாதார அபிவிருத்திக்கான மூதல் கட்டமாக சுயதேவைப் பூர்த்தி என்பதனை நோக்காகக் கொண்டு பல பொருளாதாரத் திட்டங்களை வகுத்து செயற்படுத்தி வருகின்றனர்.

உணவு உற்பத்திக்குழு கைத்தொழில் அபிவிருத்திக் குழு என்பன இன்று மக்கள் மத்தியில் மக்களின் ஜீவாதாரத் தேவைகள் குறித்து இயங்கி வருகின்றன. தமிழீழ மக்களின் பூரண ஒத்துழைப்போடு இவை மிக சிறப்பாக செயற்பட்டு வருகின்றன.

கலைச்சாரக்குழு விடுதலைப் போராட்டத்தில் கலை இலக்கியங்களினூடாக மக்களிற்கு விடுதலையுணர்வை ஏற்படுத்தி அணிதிரட்டும் முகமாக இயங்கி வருகின்றன. இவற்றுக்கெல்லாம் தமிழீழ மக்கள் தொடர்ந்தும் ஆக்கமும் ஊக்கமும் கொடுத்துவருவார்கள் என்பது உறுதி. தமிழீழ மக்களின் பூரண பங்களிப்போடு நாம் ஒன்றுபட்டு விடுதலைப் போரை வெற்றிகரமாக முன்னெடுப்போம்

## இராணுவ மேஜர் மெண்டிஸ் ஒழிக்கப்பட்டான்.

உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, போன்ற பகுதிகள் 9-5-85 காலை 3 மணியளவில் இராணுவத்தால் சுற்றி வளைககப்பட்டது இரவிரவாக கப்பல்கள் மூலம் வேறிடங்களிலிருந்து கொண்டு வந்து இறக்கப்பட்ட சுமார் மூவாயிரம் இராணுவத்தினர்இதில் ஈடுபடுத்தப்பட்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் முகாமிற்கு காவலாக இருந்த ஜெயம் உட்பட மூவர் சைக்கிளில் ரோந்து சென்று கொண்டிருந்தனர். உடுப்பிட்டியிலிருந்து வல்வெட்டித்துறைக்குச் செல்லும் ரோட்டில் இவர்கள் சென்று கொண்டிருந்த போது பஸ்நிலையமொன்றினுள் மேஜர் மெண்டிஸ் உட்பட ஐந்து இராவத்தினர் பதுங்கியிருப்பதை ஜெயம் கண்டு விட்டான். அவனது மூளையும் கையும் அதிவேகமாக இயங்கின. ஒரு கணத்தினுள் அவனது கைக்குண்டு (இது யாழ் பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டபோது அங்கிருந்து கைப்பற்றப்பட்டதாகும்) பஸ் நிலையத்தினுள் பாய்ந்து சென்றது. மெண்டிஸ் உட்பட ஐந்து இராணுவத்தினரும் ஸ்தலத்திலேயே பலியாகினர்.

பஸ்நிலையத்திற்கப்பால் வேலியோரமாகப் படுத்திருந்த மற்றைய இராணுவத்தினரின் துப்பாக்கிக்குண்டு ஜெயத்தின்மேல்பாய்ந்தது. அவன் வீரமரணம் அடைந்தான். ஆனாலும் மற்றைய இரு போராளிகளும் மின்னல் வேகத்தில் துப்பாக்கிப் பிரயோகம் செய்து கொண்டு இராணுவ முற்றுகையைஉடைத்துக்கொண்டு தப்பி வந்தனர். இவர்களின் துப்பாக்கிப் பிரயோகத்தினுல் மேலும் பல இராணுவத்தினர் இறந்திருக்கலாம்.

இந்த மேஜர் மெண்டிஸ் தான் மன்னாரில் அண்மைக் காலங்களில் நிகழ்ந்த அட்டூழியங்களிற்குப் பொறுப்பானவன் என்பது குறிப்பிடத்தக்கது. மன்னார் பகுதியில் நிகழ்ந்த கொலைகள் கொள்ளைகள், கற்பழிப்புக்கள் என்பவற்றிற்குஇவனே தலைமை தாங்கினுன். மன்னாரிலிருந்து பெருமளவு தமிழ்மக்கள் இந்தியாவிற்கு அகதிகளாகச் செல்வதற்கும் இவனது நடவடிக்கைகளே காரணமாகும். 1983-ம் ஆண்டு யூலை மாதம் மானிப்பாயில் ஏழு பாடசாலை மாணவர்களை இ. போ. ச பஸ் ஒன்றிலிருந்து இறக்கி வரிசையில் நிறுத்திச் சுட்டுக் கொன்றதும் இவனே.

# நமது பொருளாதாரமும் நாமும்

அரசியற் பொருளாதார நோக்கில் தமிழ் மக்களின் பொருளாதாரம் அவர்கள் சார்ந்திருக்கும் பிரதேசத்தோடும் முயற்சிகளோடும்மாத்திரம் தொடர்புடைய தொன்ருக அல்லாமல், அவர்களை ஆளும் அரசின் அரசியல் பொருளாதாரக் கொள்கையோடு நெருங்கிய தொடர்புடைய தொன்ருகவும காணப்படுகின்றது. ஆளும் அரசு அந்நியராக இருக்கும் வரையில் எங்கள் மக்களின் நலனை அதிகரிக்கும் வகையிலான பொருளாதார அமைப்பு இருக்க முடியாது என்பது சகலரும் அறிந்த ஒன்றே. எமது ஆதிக்கத்திற்கு உட்பட்ட அரசு தோற்றம் பெறும் வரையில் தற்போதுள்ள அரசியல் பொருளாதாரக் கொள்கையில் எம்மக்களை எவ்வாறு காப்பாற்றலாம் என்பதைப பற்றி ஆராய்வதே இன்றைய் தேவையாகும். புதிதாகத் தோற்றம் பெறப போகும் தமிழீழ அரசில் எம் மக்கள் பொருளாதாரம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இப்போதே திட்டமிட்டு செயற்படுதலும் மூக்கியமானதாகும். இன்று எம் மக்களின் பொருளாதார அமைப்பில் நாம் புகுத்தும் புதிய பரிமாணங்கள தனியரசை அமைக்கும் போராட்டத்தின் வெற்றிக்கான ஒரு பகுதியாக அமைந்து வீடும் என்பதில் சந்தேகமில்லை. மக்களே எங்கள் பிரதேசத்தின் பௌதீக வளங்களையும்; மனித வளங்களையும் எந்தளவிற்கு உச்சமாகவும் திறமையாகவும் பயன்படுத்துகிறோமோ அந்தளவிற்கு நாம் எம்போராட்டத்தின் வெற்றிக்கான முன்நோக்கிய சில அடிகளை வைத்தவர்களாவோம். எனவே எங்கள் மக்களின் நிகழ்கால எதிர்கால வாழ்க்கைத்தர முன்னேற்றத்தை மனதில் கொண்டு செயற்படுதல் வேண்டும்.

தமிழ் மக்கள் மத்தியில் உள்ள வறுமை யாரால் தோற்றுவிக்கப்பட்டது என்பதுபற்றி ஆராய்வது ஒரு புறமிருக்க; அவ்வறுமை எவ்வாறு நீக்கப்படலாம் அதற்கான திட்டங்கள் என்ன என்பதைப்பற்றி சிந்திப்பதே தலையாய கடமையாக உள்ளது வறுமை மட்டம் எத்தளவு உள்ளது என்பது நாம் நுகரும் உணவு வகைகளை அடிப்படையாகக் கொண்டும்; கல்வி அறிவை அடிப்படையாகக் கொண்டும்; போக்குவரத்து வசதிகளை அடிப்படையாகக் கொண்டும்; உடுதுணிகளை அடிப்படையாகக் கொண்டும் மதிப்பிடலாம். வருமானத்தை அடிப்படையாகக் கொண்டு வறுமையை மதிப்பிடுவது பொருத்தமான முறையாக அமைந்துவிடாது.

இலங்கையில் தமிழ் மக்கள வாழும் பிரதேசம் வரண்ட பிரதேசமாக இருப்பதனுல் மிகுந்த போராட்டதத்தின் மத்தியில் தான் தனது வாழ்க்கையை செப்பனிட முடியும்.

தமிழ் மக்களின் ஒரு பகுதியினர் விவசாயக் குடியானவர்களாக உள்ளனர். இவர்கள் சுயமாகச் செயற்படுபவர்போல வெளிப்பார்வைக்கு தோற்றமளித்தாலும் இவர்கள் நடவடிக்கையும், முயற்சியையும் அரசாங்கம் பொருளாதாரக் கொள்கை அடிக்கடி பாதித்து வருவதனை நாம் பல காலங்களில் உணர்ந்திருக்கிறோம். காசுப்பயிர் உற்பத்தியில் இப்படியான விவசாயி கவனம் செலுத்தும் போதெல்லாம் இன்றைய அரசு ஏதோ ஒரு விதத்தில் அதற்கு தடையாகவே இருந்து வந்துள்ளது. இவை தமிழ் மக்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நடவடிக்கையாகவே பல சந்தர்ப்பங்களில் இருந்துள்ளன. தமிழ் மக்களும் இவ்விதமான பாகுபாடுள்ள அரசியல் பொருளாதார செயற்பாட்டின் மத்தியில் சீவனோபாய வாழ்க்கை மட்டத்தை காப்பாற்றுவதற்காக இலாபந்தரக் கூடிய ஒரு பயிர்ச் செய்கையில் மாத்திரம் கவனம் செலுத்தாது; அரசின் உறுதியற்ற வகுப்புவாத பொருளாதாரக் கொள்கையை எதிர்த்துச் சமாளிக்கும் வகையில் பலபயிர்ச் செய்கையில் ஈடுபடுகின்றனர். அதாவது இலாபந்தரக்கூடியதும் சந்தைப் படுத்தக்கூடியதுமான மிளகாய் வெங்காயம புகையிலை போன்றவற்றுள் சந்தையில்கிராக்கியுடைய ஒரு பொருளை மாத்திரம் உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தாமல் பல பயிர்களை தம் நிலங்களில் பயிரிடுகின்றனர். நம் மக்கள் பல பயிர்களைப் பயிரிடும் போது தத்தமது குடும்பங்களின் உணவிற்கும் விவசாயத்தில் ஈடுபடாத அயலவர்களின் உணவிற்கும் தானியப்பயிரையும் கிழங்குப்பயிரையும் தம் பயிர்ச்செய்கை, ஒழுங்கில் சேர்த்துக்கொள்ள வேண்டும் இல்லையேல் அரசாங்கம் உணவுப்பொருளை திட்டமிட்டு அனுப்பாது விடுமானுல் எங்கள் குழந்தைகளும் எங்கள் பெண்களும் எங்கள் குடும்பமும் எங்கள் அயலவரும் பட்டினியால் இறப்பர் இன்று போராட்டத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈடுபட்டுவரும் எங்கள் இளைஞர்களும் பட்டினியால் வாடுவர் இது போராட்டத்தின் வேகத்தைக் கரைத்துவிடும் எம்மக்களே எங்களால் இயன்றளவு உணவு உற்பத்தியில் எல்லோரும் ஈடுபடுவோம்.

## திரு.வி.என்.நவரத்தினம் வீட்டில்..

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் பலமுனையிலும் வளர்ச்சியடைந்து வருகிறது. அதற்கான நிதித்தேவையை நிவர்த்தி செய்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மக்களை நாடியுள்ளனர். வீட்டிற்கு ஒரு பவுண் கேட்ட விடுதலைப் புலிகளிற்கு எதிர்பார்த்தை விட கூடுதலான ஆதரவு கிடைத்து வருகிறது. ஏழை மக்கள் தம்மிடமுள்ள ஓரிரு நகைகளைக் கூட தமது விடுதலைக்காக உணர்வுபூர்வமாக கொடுக்கிறுர்கள்.

முன்னுள் சாவகச்சேரி தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரட்னம் அவர்களின் வீட்டிற்கும் விடுதலைப் புலிகள் சென்றனர். அவர்தற்போது தமிழ் ஈழத்தில் இல்லை,எங்கிருக்கிறுர் என்பதும் தெரியவில்லை. அவரது மனைவி போர்த்து மூடிய வண்ணம் வந்தார், விடுதலைப் புலிகளின் வரவை முன்கூட்டியே அறிந்திருந்தார் போலும் தமது குடும்பத்தினர் இங்கிருப்பது பாதுகாப்பில்லை என்பதால் அனைவரையும் பாதுகாப்பாக இந்தியாவிற்கு அனுப்பிவிட்டதாகவும், பிள்ளைகளை இந்தியாவில் படிப்பிப்பதற்கு வேண்டிய செலவிற்காக தமது நகைகள் எல்லாவற்றையும் விற்றுவிட்டதாகவும் கூறினுர்,

'உங்கள் குடும்பத்தைப் பாதுகாப்பதற்காக பெருந்தொகையான பவுணை விற்ற நீங்கள் தமிழ் மக்களைப் பாதுகாப்பதற்காக ஒரு பவுணாவது கொடுங்கள். என கேட்கப்பட்டது. தம்மிடம் ஒரு சிறு நகை கூட இல்லை என கையையும், காதையும் காட்டினுர்., தமிழ் மக்களின் மீட்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்ட இவர்களிறகா இக்கதி என நினைத்து ஏங்கிய வண்ணம் திரும்பியபோது அவர் போர்த்திருந்த சேலைத் தலைப்பு சற்று விலகியது. கழுத்தில் தடித்த பவுண் சங்கிலி ஒன்று பளிச்சிட்டது தமிழ் மக்களின் கடந்த காலத்தை எண்ணி நொந்த விடுதலைப் புலிகள் அடுத்த வீடு நோக்கிச் சென்றனர்.

## இராணுவ வெறியாட்டத்திற்கு எதிர்ப்பு.

இதுகாலம் வரை தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெற்றுவரும் இராணுவக் கெடுபிடிகளுக்கும் ஒடுக்கு முறைக்கும் அடையாள எதிப்பாக 21-5-85 அன்று யாழ். பல்கலைக் கழகத்தில் உண்ணுவிரதம் மேற் கொள்ளப்பட்டது. குடாநாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலைகளிலும் அன்னையர் முன்னணி போன்றஅமைப்புகளும் இவ் உண்ணுவிரதத்தில் பங்கு கொண்டன. கடையடைப்பும் குறிப்பிட்ட நேரத்தில் வாகனங்கள் ஹோன் ஒலியெழுப்பியும் ஆலயங்களில் மணியடித்தும்ஒடுக்குமுறைக்கெதிராக தமிழ் மக்களின் ஒருங்கிணைந்த எதிர்ப்பைத் தெரிவித்தனர் சில இடங்களில் விடுதலை கீதங்களும்விடுதலை சம்பந்தமான கருத்தரங்குகளும் நடைபெற்றன.

www.padippakam.com


# விடுதலையைத் துரிதப்படுத்துவோம்

சிறிலங்கா இராணுவத்தின் மீதான தமிழீழ விடுதலைப் போராளிகளின் தாக்குதல் உக்கிரமடைந்துள்ள இவ்வேளையில் அரசு நவீன ஆயுதங்களை இறக்குமதி செய்து இராணுவத்தை ஆயுதமயப்படுத்துகிறது.

இங்கிலாந்திலிருந்து அண்மையில் இரண்டு அவ்ரோ விமானங்களை அரசு வாங்கியுள்ளது. இராணுவத்திடம் இருக்கும் பீரங்கி மூன்று மைல் தூரத்திற்கு குண்டு வீசத்தக்கது. கடற்படையினரின் வீரயா, சூரயா போன்ற யுத்தப்படகுகள் கடலில் நின்றவாறே எறிந்த குண்டுகள் ஐந்து மைல் தூரத்திலுள்ள பருத்தித்துறை கிராமங்களை அழித்தமை மக்கள் அறிந்ததே. தரையில் விடுதலைப் போராளிகளுடன் மோதப் பயந்து இராணுவத்தினர் ஹெலிக் கொப்டர்களில் பறந்தவண்ணம் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வருகின்றனர்.

இராணுவ அட்டூழியங்களிலிருந்து தமிழ்மக்களைப் பாதுகாக்கவும், சிறீலங்கா இராணுவத்தை தமிழீழத்திலிருந்து விரட்டியடிப்பதற்கும் விடுதலைப் புலிகளும் நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

எமது இழப்புகளைக் குறைத்து விடுதலைப் போராட்டத்தில் வெற்றிபெறுவதற்கு நவீன ஆயுதங்கள் எமக்கும் அவசியமானதே.

எல்லாவிதமான ஆயுதங்கள் வாங்குவதற்கும் வசதிகள் உண்டு ஆனால் விடுதலைப்புலிகளிடம்பணம் தான் இல்லை. அனைத்துத் தமிழ் மக்களும் நகையாகவோ பணமாகவோ எவ்வாறேனும் உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். எத்தனை பேர் விடுதலைக்காக தமது உயிர்களையே தியாகம் செய்கிறார்கள். ஒவ்வொருவரும் இயலுமானவரை அதிகமாக விடுதலைக்காக கொடுப்பதன் மூலம் உங்கள் பவுனையும் பணத்தையும் பெறுமதியுள்ளதாக மாற்றிக் கொள்ளுங்கள் நீங்கள் கொடுக்கும் ஒவ்வொரு பவுணும் தமிழ் மக்களின் வீணான உயிரிழப்பை தவிர்க்கும்.

தமிழ் மக்கள் அடையப் போகும் இலட்சிய தமிழீழத்தில் நகைகள் சொத்துகளிற்கான தேவை ஏற்படாது மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது அங்கு அரசாங்கத்தின் கடமையாக இருக்கும். நீங்கள் வைத்திருக்கும் நகைகள் இராணுவத்தினால் கொள்ளையிடப்படலாம், தமிழீழத்திற்கு வரும் இராணுவத்தினர் திரும்பிச் செல்லும் போது பெரும் பணக்காரராகவே செல்கின்றனர். மேலும் மேலும் இராணுவத்தினரை தமிழீழத்திற்கு செல்லுமாறு உற்சாகப் படுத்துவதற்காக சிறீலங்கா அரசு இதனைப் பயன்படுத்துகிறது. எமது சொத்து பறிபோவது மட்டுமல்ல எம்மை ஒடுக்குவதற்காக மேலும்இராணுவத்தினரை இங்கு வரவழைப்பதற்கும் அதுவே காரணமாக உள்ளது.

உண்மை நிலையை உணர்ந்த தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளின்கோரிக்கைக்கு அமோக ஆதரவு அளிக்கிறார்கள். நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திய சில சமூக விரோதிகளும் விடுதலைப் புலிகளின் பெயரைச் சொல்லி மக்களிடமிருந்து பணத்தைக் கொள்ளையிடுகின்றனர். எனவே விடுதலைப் புலிகளிற்கு பணமோ, பவுனோ, கொடுக்க விரும்புபவர்கள் உங்களிடம் வருபவர்களிடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால்வழங்கப்பட்ட அடையாள அட்டை இருக்கிறதா என அறியுங்கள். அவர்களின் அடையாள அட்டையை வாங்கிப் பார்த்தபின் மட்டுமே உங்கள் பங்களிப்பைச்செலுத்துங்கள்.

**சிறீலங்கா அரசின் ஒருநாளைய பாதுகாப்புச் செலவு 1 கோடி60 லட்சம்**

# எச்சரிக்கையாக இருங்கள்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக வளர்ச்சியடைந்து வருகிறது. பெரும்பான்மையான தமிழ் மக்கள் பல்வேறு வழிகளில் தங்கள் பங்களிப்பைச் செலுத்துகின்றனர். இந்நிலையில் போராளிகள் ஓரளவு வெளிப்படையாகவே மக்களுடன்இணைந்துசெயற்படுகின்றனர்.

நிலைமையை சாதகமாக பயன்படுத்தும் சில துரோகிகள் மக்களோடு இணைந்து பழகி தகவல்களை அறிந்து எதிரிக்கு அனுப்புகின்றனர் அண்மைக் காலங்களில் போராளிகள் இருப்பிடங்கள் இராணுவத்தினால்தகர்க்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

அண்மையில் பன்னிரண்டு வயதுச் சிறுவனொருவன் விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட போது அவனால் இராணுவத்தினரிற்குபெருமளவு தகவல்கள் கொடுக்கப்பட்டது தெரிய வந்தது. இன்னோர் காவியுடை தரித்த சாமியார் வயது நாற்பத்தி ஐந்து இருக்கும், இராணுவத்தின் ஒற்றராக மக்கள் மத்தியில் உலாவியது கண்டு பிடிக்கப்பட்டது.

உங்கள் அருகிலும் ஒற்றர்கள்இருக்கலாம். உங்கள் பகுதிகளில் நீங்கள் அறியாத புதியவர்களைக் கண்டால் கவனமாக இருங்கள் ஐஸ்பழம் விற்பவராக, பழையகோட் வாங்குபவராக, பிச்சை எடுப்பவராக சாமியார் வேடம் பூண்டவராக, புத்தி சுவாதீனம் இல்லாதவர் போல பல வழிகளில் ஒற்றர்கள் உலாவுகிறார்கள். உங்களிற்கு சந்தேகமானவர்களின் நடமாட்டத்தை அவதானியுங்கள். சந்தேகத்திற்கிடமானவர்களைப் பிடித்து (அவர்களிற்கு எவ்விதத்திலும் இம்சைகள்புரியாது) நீங்கள் அறிந்த விடுதலைப்போராளிகளிடம் கையளியுங்கள்.

உங்களிற்குத் தெரிந்த இரகசியங்களைப்பற்றிகண்ட இடத்திலும் பேசாதீர்கள் உங்களை அறியாமலே நீங்கள் கதைக்கும் தகவல்கள் எதிரிக்குக் கிடைக்கலாம். இவை விடுதலைப் போராட்டத்தில் இழப்புகளை அதிகரிக்கும்.

இராணுவத்தினரைஎங்காவது கண்டால் உடனே மற்றயவர்களிற்கு தகவல் கொடுங்கள். நீங்கள் காணுபவர்களையெல்லாம் எச்சரியுங்கள். இராணுவநடமாட்டம் பற்றிய சரியான தகவல்களை விரைவாகப் பரப்புங்கள் உங்கள் பகுதி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப் படுவதை அறிந்தால் உடனடியாக நீங்கள் அறிந்த விடுதலைப் போராளிகளினது முகாம்களிற்கு தகவல்கொடுங்கள். நீங்கள் பரப்பத்தவறும் சிறிய தகவல்கள் விடுதலைப் போராட்டத்தில் பெரிய இழப்புகளை ஏற்படுத்தலாம்.

# பிலிப்பைன்சில் மக்கள் ..

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பன்மடங்கு வளர்ந்துள்ளன பல புதிய கூட்டமைப்புக்கள் தன்னிச்சையாக எழுந்துள்ளன. ஜனநாயக மீளமைப்புக்கான கூட்டமைப்பு (CORD), தேசிய ஒற்றுமையமைப்பு (NA) என்பன இவற்றில் சில. வர்த்தகர்கள், முகாமையாளர் போன்ற உயர் உத்தியோகத்தர் கூட இத்தகைய எதிர்ப்பியக்கங்களில் ஈடுபட்டுள்ளனர். மோட்டார் கார் ஊர்வலம், ஸ்டிக்கர் (Stieker) ஒட்டுதல், வீதிகளில் அணியாக ஓடுதல் போன்ற பலபுதிய எதிர்ப்பு நடவடிக்கைகள் எழுந்துள்ளன.

புரட்சி மனப்பான்மையின் வளர்ச்சிக்கு முக்கிய சான்று என்னவெனில் NPA (புதிய மக்கள் இராணுவம்) என்றழைக்கப்படும் இராணுவ ரீதியான புரட்சி அமைப்பின் வளர்ச்சியே; 1969ல் 50 போராளிகளுடனும் 35 துவக்குகளுடனும் தொடங்கிய இவ் இயக்கம், இன்று 20,000 முழுநேர போராளிகளுடனும் 10,000 சக்திவாய்ந்த துவக்குகளுடனும் இயங்குவதோடுகூட, கெரில்லா அணிகளாக பிரிந்து பிலிப்பைன்சிலுள்ள 72 மாகாணங்களில் 53ல் இயங்குகின்றன. இவற்றைவிட பல கோடி மக்கள் பகுதிநேரப் போராளிகளாகவும் ஆதரவாளராகவும் அங்கம் வகிக்கின்றனர்.

இத்தகைய அளவில் மக்கள் சக்தியைத் திரட்டியமைக்கான படிகளை நாம் ஆராயின், மக்கள் மனதில் ஒரு புரட்சி மனப்பான்மையை வளர்த்தெடுப்பதே முதல் படியாகும். நாட்டின் நிலைமைகளை ஆழமாகவும் பூரணமாகவும் ஆராயும் சமூக ஆராய்ச்சியே இப் புரட்சி மனப்பான்மையை கட்டியெழுப்புவதிற்கு உதவுகின்றன. இச் சமூக ஆராய்ச்சிக்கு இரு அணுகுமுறைகள் உண்டு. (1) சரித்திரரீதியான ஆராய்ச்சி (அதாவது கடந்த காலத்திற்கூடாக சமூகத்திலேற்பட்ட நிகழ்வுகளின் நிகழ்கால தாக்கங்களை ஆராய்தல்) (2) ஸ்தாபனரீதியான ஆராய்ச்சி (நிகழ்காலத்தில் இயங்கும் சமூகஅமைப்புக்களின் தாக்கங்களை ஆராய்தல்); இத்தகைய பார்வையை மக்களில் வளர்ப்பதால் மக்கள் சரித்திரத்தின் கைப்பொம்மைகளாக இருப்பதிலிருந்து விடுதலை பெற்று, சரித்திரத்தினை உருவாக்குபவர்களாக மாறுகின்றனர். இத்தகைய பார்வையை சமூகத் தொண்டர்கள் பாமர மக்களின் மனதில் வளர்ப்பதால், மக்கள் அநீதியின் ஊற்றுகளையும், சமூகத்தில் நிலவும் வர்க்கப் போராட்டத்தையும் இனங்கண்டு கொள்கின்றனர். கருத்தரங்குகள், பயிற்சி முகாங்கள், சொந்த உரையாடல்கள் மூலம் மக்கள் மனதில் இத்தகைய கண்ணோட்டம் வளர்க்கப்படுகின்றது.

மக்களை அமைப்பு ரீதியாக இயங்க வைப்பது அவர்களின் விழிப்புணர்வில் இன்றியமையாத இடம் வகிக்கின்றது இதுவே அடுத்த படியாகும் அமைப்பு ரீதியாக இயங்கும் அனுபவம் அவர்களை கூடுதலாக ஒற்றுமைப்பட வைப்பதோடு, தம் பொதுவான பிரச்சினைகளை பகிர்ந்துகொள்வதால் அரசியல் உணர்வு வலுவடையவும் உதவுகிறது. பிரச்சினைகளை ஆராய்வதோடு மாத்திரம் நின்றுவிடாது தம் பொது நலன்களை வென்றெடுக்கவும் தாபன ரீதியான நடவடிக்கை உதவுகிறது. அத்தோடு தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் மக்களிடையே வளர்க்கிறது.

சிறிய குழுக்களாக தொடங்கிய இவ் அமைப்புகள் நாளடைவில் வேறு மக்களையும் சேர்த்து, குழுக்கள் பெரிதாகி, பின்பு சிறிய குழுக்களை உள்ளடக்கிய கூட்டமைப்புகள் பிராந்திய ரீதியாக உருவாகி, இறுதியில் நாடு முழுவதையும் உள்ளடக்கிய முன்னணியாக பரிணமித்துள்ளன. பல்தரப்பட்ட மட்டங்களில் மக்களின் பங்களிப்பை உறுதிசெய்வதோடு, சுயநிர்ணயத்திற்கும் சமதத்துவத்திற்குமான பயிற்சியையும் இம்மக்கள் தாபனங்கள் மறைமுகமாக வழங்குகின்றன. அத்துடன் குறுகிய காலத்திற்கான தற்காலிகமான உணர்ச்சிவசப்பட்ட போராட்டமாக மாத்திரம் புரட்சி அமையாது, நீண்டகால நோக்கில் கட்டியெழுப்பப்படுவதற்கும் மக்கள் அமைப்புகள் உதவின.

இப்படியாக மக்களை அணிதிரட்டுவதில் புத்திஜீவிகளுக்கு ஒரு பங்குண்டு என்பதை மறுக்கமுடியாது. விவசாயிகள் தொழிலாளர்களை போன்று மாணவர்கள் ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், மதகுருக்கள் ஆகியோர் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடாவிட்டாலும் அடித்தள மக்களின் எண்ணங்களை சேகரித்து ஒருங்கிணைத்து, பரிமாறி, மக்களை விழிப்புணர்வின் பாதையில் இட்டுச் செல்வது இவர்களின் பொறுப்பாகிறது. 1896ல் ஸ்பானியாவிலிருந்து விடுதலை பெறுவதற்கான தேசியபோராட்டம் முதல் இன்றுவரை பிலிப்பைன்சின் புத்திஜீவிகள், மதகுருக்கள் ஆகியோர் மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றிய ஆராய்ச்சி மூலமும், மக்களின் அரசியல் மயப்படுத்தலில் உதவுவதன் மூலமும், போராட்டத்தில் பங்களித்துள்ளனர்.

இளைஞர்கள் மாத்திரமே போராடி மக்களுக்கு விடுதலையைப் பெற்றுத்தந்து விடுவார்கள் என்று பிலிப்பைன்ஸ் மக்கள் போராட்டத்திலிருந்து விலகி நிற்பதில்லை. அங்கு அரசியல் மயப்படுத்தப்பட்ட மக்கள் வெள்ளம் புரட்சியில் முக்கிய பங்கெடுக்கும்போது புரட்சி ஜனநாயக ரீதியாக நடைபோடுகின்றது.

www.padippakam.com

# எமதியக்க போராட்ட வரலாற்றில் உயிர் நீத்த தியாகிகள் இன்றுவரை நூற்றி ஒருவர்.

## எம் இதயங்களின் ஆழத்தில் என்றும் வாழ்ந்து வரும் இவர்களின் நினைவுகள்...

# தியாகவேங்கையான வாசனுக்கு இதய அஞ்சலி

வாசன் அவனை நினைத்தவுடன் எம் நினைவுகளிலும், கண்களிலும் நிழலாடுவது ஓர் புன் சிரிப்பு. ஆயிரக்கணக்கானவர்களின் இதயங்களைக் கொள்ளை கொண்ட ஆனந்தச் சிரிப்பு. மரணம் அவனைத் தழுவிய போதும் கூட அதே சிரிப்பு அந்த மாவீரனின் முகத்தில் தவழ்ந்து கொண்டிருந்தது.

இயக்கத் தோழர்கள் வாசனைசெல்லமாக "பூதம்" என்றும் "முரடா" என்றும் அழைப்பார்கள். வாசனின் வீரமும், அன்புமே அவனுக்கு இப்பெயர்களைத் தேடிக் கொடுத்தன. தாக்குதல்களில் முன்னணியில் நின்று அவன் போரிடும் அழகு இன்னும் எம்இதயங்களை விட்டு அகலவில்லை என்றும் அகலப் போவதுமில்லை. அவனின் செயற்பாடுகள் எமக்கு ஓர் புதிய அத்தியாயமாக படிப்பினையைத் தந்து கொண்டிருக்கும்.

தாக்குதல்களில்மட்டும் அவன் திறமையை காட்டவில்லை. வருங்காலதமிழீழத்தின் நலன்கருதி எமதுஇயக்கத்தால் முன்னெடுத்துச் செய்யப்படும். பொருளாதாரத்துறை, கைத்தொழில் அபிவிருத்திக்குழு உணவு உற்பத்திக்குழு, போன்றவற்றில் அவனின் கடுமையான உழைப்பு இன்று வாசனின் நினைவு பகரும் சான்றுகள் வாசனின் கடுமையான உழைப்பு. அவனுடைய செயற் திட்டங்கள் உண்மை வீரனுக்கு ஓர் எடுத்துக் காட்டு.

வாசன் குருநகர் பகுதியில் அரசியல் வேலை செய்வதற்காக நியமிக்கப்பட்டவன் தனது திறமையால், நல்லபண்பால், எமது இயக்கத்தின் விடுதலைக் கோட்பாட்டை மக்கள் மத்தியில் வழி நடத்தும் செயற்பாட்டினுல் மக்களைக் கவர்ந்தவன், குருநகர்ப் பகுதி மக்களோடு ஒன்ருகி, அவர்களோடு பின்னிப்பிணைந்து, உறவாடிய வாசன் இன்று அம்மக்களோடு சங்கமித்து விட்டான்.

அரசியல் பிரிவில் வேலை செய்து கொண்டிருக்கும் போதே பல தாக்குதல்களை முன்னின்று நடாத்தியவன் விடுதலைப் புலிகளின் வரலாறு வாழும் வரை வாசனின், நினைவுகளும் புகழும் வாழ்ந்து கொண்டே இருக்கும் வாசனின் வீரதைத எடுத்துக் காட்டுவதற்கு நாம சரித்திர நாயகனைத் தேட வேண்டியிருக்கிறது.

வாசன் முன் நின்று நடாத்திய முதல் தாக்குதலில் இனவெறி பிடிதத "ஆரியப் பெருமா" பலியானுன். ஆரியப்பெருமாவுக்காக அவன் காத்திருந்த பொழுதுகள் ஏராளம். தேடித் அரிந்த இடங்கள் கணக்கில் அடங்காதவை, மீண்டும், மீண்டும், சலிப்படையாத, மனந்தளராத முயற்சியால் கட்டுவனில் வைத்து வெடிகுண்டுத்தாக்குதலுக்கு ஆரியப் பெருமாவைப் பலியாக்கினுன். வாசனின் விடா முயற்சி அவன் எமக்கு விட்டுச் சென்ற படிக்கற்கள்.

பலாலி விமான நிலையத்தின், விமானப்படை விமானம் மீதான தாக்குதலும் வாசனின் விடா முயற்சியையும் தன்னம்பிக்கையையும், துணிவையும். எடுத்துக் காட்டுவன. யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கு. வாசன் தன் விடா முயற்சியாலும் அயராத உழைப்பினுலும் வித்திட்டவன்.

யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலை வாசன் தாக்குதல் பிரிவு லெப்டினுகை பதவியேற்று நடாத்திய முதல் தாக்குதல். L. M. G யை சுமந்து கொண்டு அவன் துரையப்பா விளையாட்டரங்கில் நிலை கொண்டிருந்த அதிரடிப்படையினர் மீது மூர்க்கத் தனமான தாக்குதலை நடாத்தி அவர்களை கிலி கொண்டு ஓட ஓட விரட்டிய மாவீரன். கோட்டையில் இருந்து பலத்த பதில் தாக்குதல் நடந்து கொண்டிருக்கும் போதும் தனது தோழர்களோடுஉட்புகுந்து எதிரியின் குண்டுகள் தன்னை நோக்கி சீறிக் கொண்டிருக்கும் போதே பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றிஎமக்கு மாபெரும் வெற்றியைத் தேடிக் கொடுத்த உண்மை வீரன். இன்று எம்மத்தியில் இல்லை. வாசனின்சிறந்தநிலை எடுத்தல், வேகமாகப் பாய்ந்து முன்னேறல், கோரத்தாக்குதல், இவை எம் புதிய தோழர்களுக்கு புகட்டப்படும் பாடமாகிறது.



யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின் மறுநாள் தனது களைப்பையும், சிரமத்தையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் மக்கள்மீது அவன் கொண்ட அன்பை மதிப்பை பறைசாற்றுவன. வாசன் மறைந்த அன்று மக்கள் அடைந்த வேதனையும், ஓயாத புலம்பல்களும். அம்மக்கள் சமுத்திரம் வாசன் மீதும் எமது இயக்க கோட்பாட்டின் மீதும் வைத்திருக்கும் தெட்டத் தெளிவான நம்பிக்கையையும், வெளிப்படுத்துவது மட்டுமன்றி எமது இயக்கத்தின் வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டம் மக்கள் போராட்டமாக பரிணமித்துள்ள தென்பதை உறுதிப்படுத்துவதுமாயிருந்தது.

நாவற்குழி முகாமில் கடமையாற்றிய கப்டன் "ரத்நாயக்காவின்" அட்டூழியங்களும், அடாவடித்தனங்களும் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருந்த வேளை, அவனுக்காக அரியாலையில்வாசன் வெடிகுண்டுத் தாக்குதலை மேற்கொண்டான் அத்தாக்குதலில் இராணுவ கவச வாகனம் சிதைக்கப்பட்டது. ஆனுல் ரத்நாயக்கா பலத்தகாயங்களுடன் தப்பி இப்போ கொழும்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். அதன் பின்னர் குருநகர் முகாமில் இருந்து உதவிக்கு வந்த ராணுவத்தினர் பொது மக்கள் மீது தாக்குதலை நடாத்த முனைந்த போது வாசன் 'ரொக்கட் லோஞ்சர் சகிதம் தன் தோழர்களோடு சென்று 8மணி நேரமாக தாக்குதலை நடாத்தி மீண்டும் ரொக்கட் மூலம் கவச வாகனம் ஒன்றை சின்னபின்னப்படுத்தி ராணுவத்தினரை கிலி கொள்ளச் செய்தான்.

ஒருநாள் மதியநேரம் குருநகர்ப் பகுதியில் உள்ள பீச்ரோட்டுக்கு அருகில் உள்ள மாடிவீடும். அதனைச் சார்ந்த பகுதிகளும் முற்றுகையிடப்படுகின்றது. ஏராளமான கவசவாகனங்கள் சகிதம், முற்றுகை விட்ட ராணுவத்தினர், கீழ் வீட்டில் இருந்தவர்களிடம் வாசனை விஞவினர். சிலர் மாடிவீட்டை நோக்கி படிகளில் ஏறிக்கொண்டிருக்கின்றனர். திடீரென்று மாடிவீட்டில் தோன்றிய வாசனின் கையில் இருந்த .38 Special றிவோல்வர் முழங்குகின்றது. முதலில் மேலே வந்துகொண்டிருந்தவன் சுப்பு ச்சரிய சிலர் கீழே இறங்கி ஓடமுயல, மீண்டும், மீண்டும் வாசனின் கைத்துப்பாக்கி முழங்க, சிலர் குண்டடிபட்டு காயங்களுடன் கீழே பாய்கின்றனர். எல்லா ராணுவத்தினரினதும் துப்பாக்கி ரவைகள் மாடிவீட்டை நோக்கிப்பாய்கின்றன.

வாசன் மாடிவீட்டில் இருப்பதை அறிந்த யாரோ காட்டிக்கொடுக்கும் "திருவாளர்" இராணுவத்துக்கு தெரியப்படுத்தியதாலேயே இம்முற்றுகையிடப்பட்டது.

முற்றுகை யிடப்படும் போது மேல்வீட்டில்இருந்த வாசன் வெளியேறுவதற்கு வேறுவழி இருக்கவில்லை. மேல் ஏறிய எதிரிகளைச் சுட்டபின் "அஸ்பெஸ்ரோஸ்" கூரையை உடைத்துக்கொண்டு மேலேசெல்ல கீழிருந்த எதிரிகளின் துப்பாக்கிகள் வாசனை நோக்கி சீறத்தொடங்கின. மேல் இருந்து கீழே குதிக்கின்ருன் ரவைகள் அவனைத் துரத்த நிலத்தில் உருண்டு,உருண்டு அத்தடைகளைதாண்டிஓடிய வாசன் மாட்டின் ரோட்டைத் தாண்டும் போது ஒரு ராணுவவீரனின் துப்பாக்கி சடசடக்கிறது. ஒரே ஒரு ரவை வாசனின் வயிற்றை பக்கவாட்டாக துளைத்துச் செல்கின்றது.

சற்றுத் தடுமாறிய வாசன பின் தன்னைச் சுதாகரித்துக்கொண்டு ஓடுகிருன் களைப்பு மிகுதியால வாசன் ஓரிடத்தில் விழுந்து விட்டான். காயம் பலமாய் பட்டிருப்பதால் பெருமளவு இரத்தம் வெளியேறிக் கொண்டிருப்பதால் வாசன் சுயநினைவை இழக்கத்தொடங்கியபோது, அவனது தோழர்களும். நண்பர்களும். அணுகிவிட்டனர் தோழர்களைக் கண்ட வாசன் அந்நிலையிலும் தன் மாருத புன்சிரிப்பால் அவர்களை வரவேற்கின்ருன்.

அபாயநிலையில் இருக்கும் வாசனை எடுத்துச் செல்ல அண்மையில்இருந்த வாகனம் ஒன்றை கேட்ட போது அதன் உரிமையாளர் தகாத வார்த்தைகளால் ஏசி வாகனத்தை கொடுக்க மறுக்கின்ருர். தோழர்கள் மீண்டும், மீண்டும் கெஞ்சியும் அந்த இரக்கமற்ற நல்ல மனிதர் தன் வாகனத்தை கொடுக்க மறுக்கவே தோழர்கள் கைகளிலேயே தூக்கிக் கொண்டு ஓடுகின்றனர். வாகனம் உடனடியாக கிடைக்காததால் பெருமளவில் இரத்தம் வெளியேறி விட்டதால் வாசனின் உடல் தொழிற்பாட்டை நிறுத்துகின்றது.

தோழர்களின் கைகளிலே வாசனின் உயிர் பிரிகின்றது. அப்போதும் அதே மாருத புன்னகை வாசனின் முகத்தில் தவழ்கின்றது அவனுடைய வீரவரலாறு ஓர் காவியம்.

வாசனை எண்ணும் பொழுதெல்லாம் எம் கண்களிலே கண்ணீர் ஊற்றெடுத்து ஓடததான் செய்கின்றது ஆனுல் நாம் அழவில்லை......

## மன்னர் பொலிஸ் நிலைய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாவரும் அறிந்ததே. பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்ட அடுத்தநாள் இராணுவத்தினர் நகரிற்கு வந்து பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தாது பாதுகாப்பதற்காக விடுதலைப் புலிகள் நகரெங்கும் காவல் புரிந்தமை எல்லோரும் நேரில் கண்டதே. ஒருநாள் பூராவும் யாழ்நகர் தமிழீழ விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டின் இருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் பரந்துபட்ட போராட்டத்தில் யாழ்.பொலிஸ் நிலையம், மன்னர் பொலிஸ் நிலையம் என்பன கைப்பற்றப்பட்டமை, தமிழ் மக்களிற்கு ஒரு புதுத் தெம்பையும்உற்சாகத்தையும் அளித்துள்ளது. தமிழ் மக்கள் தமது விடுதலைப் பாதையில் தொடர்ந்து வெற்றி நடைபோடுகின்றனர்.

எமது முதலாவது வெளியீடான களத்தில் பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான ஆக்கங்களையும் நாம் தமிழ் பேசும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிருேம். உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும்

"ஆசிரியர்குழு களத்தில்"

என விலாசமிட்ட கடித உறையிலிட்டு எமது முழு நேர ஊழியர் எவரிடமாவது கொடுத்து விடவும்.

நன்றி.